சகலருக்கும் உணவுபொருள்கிடைக்கவேண்டும்

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஐப்பசி 15 இதழ்: 262
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 01-11-1991

## மாத்தயா கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
"இன்றைய இக்கட்டான நிலையில் மக்கள் அனைவருக்கும் உணவுப் பொருட்கள் கிடைக்க வேண்டும்; இருக்கும் உணவுப் பொருட்களை பெறமுடியாமல் மக்கள் பட்டி

(4ம் பக்கம் பார்க்க)

## தமிழ் அரசியல் கட்சிகள் அனுராவுடன் பேச்சு

(கொழும்பு)
ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிப் பொதுச்செயலர் திரு. அநுர பண்டாரநாயக்காவுடன் தமிழ்க் கட்சிகள் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தியுள்ளன. இனப்பிரச்சினை தீர்வுகுறித்து

(4-ம் பக்கம் பார்க்க)

## இந்திய - இலங்கை உறவு உன்னதநிலையில் இருக்கிறது

### பிரட்மன் வீரக்கோன்

(கொழும்பு)
இந்திய - இலங்கை உறவுகள் உன்னத நிலையில் இருப்பதாக ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோன் பத்திரிகையாளர் மத்

(4-ம் பக்கம் பார்க்க)

நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த,

# முக்கிய தலைவர்களைக் கொல்ல

# அந்நிய சக்திகள் திட்டம்

## ஜனாதிபதி எச்சரிக்கை

[கொழும்பு]
நாட்டிலுள்ள முக்கிய தலைவர்கள் சிலரை குறிவைத்து அந்நிய சக்திகள் அரசியல் படுகொலைகள்நடத்த திட்டமிட்டுள்ளன என்று ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா எச்சரிக்கை செய்துள்ளார்.

இக்கொலைகளை நடத்த அந்நிய சக்திகளின் துணையுடன் உள்ளூர் சக்திகள் திரைமறைவில் முயன்று வருகின்றன. அப்படி எதுவும் நடந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

நாட்டில் அரசியல் குழப்ப நிலையைத் தோற்றுவிக்கவே அவர்கள் இவ்வாறு அரசியல் படுகொலைகளை நடத்த திட்டமிட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

கொலைக்குழுவின் இம்முயற்சியின்போது தாம்கூட கொலை

(4-ம் பக்கம் பார்க்க)

## புதிய கடற்படை தளபதி

(கொழும்பு)
வைஸ் அட்மிரல் லெஸ்லி பெர்னாண்டோ புதிய கடற்படைத்தளபதியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

## ஹோட்டல்களுக்கு பலத்த பாதுகாப்பு

(கொழும்பு)
கொழும்பிலுள்ள ஐந்து நட்சத்திர உல்லாச ஹோட்டல்களுக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

"சார்க்" மாநாட்டில் பங்குபற்றும் தலைவர்கள் இ

(4ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தாக்குதலினால் ராணுவம் பின்வாங்கியது

(மன்னார்)
மன்னார் மாவட்டத்திலுள்ள பள்ளிக்குடா இராணுவமுகாமிலிருந்து வெளியேவரமுயன்ற படையினர் மீது புலிகள் நடத்திய தாக்குதலையடுத்து இராணுவத்தினர் பின்வாங்கிச் சென்றனர்.

நேற்று இம்முகாமிலிருந்து 350 யார் தூரம் முன்னேறி

[4-ம் பக்கம் பார்க்க]

## பரீட்சை நடாத்த அரசு அங்கீகாரம்

(கொழும்பு)
வட இலங்கை மருத்துவக் கல்லூரியின் 2ம் வருட எம். பி. பி. எஸ். பரீட்சை நடாத்த அரசு அங்கீகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கல்வி அமைச்சின் ஆலோசனையைத் தொடர்ந்து இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

82 மாணவர்கள் இந்த 2ம் வருட எம். பி. பி. எஸ் பரீட்சைக்கு தோற்றவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (153)

## நரசிம்மராவ் 24 மணித்தியாலங்களே இலங்கையில் தங்குவார்

(கொழும்பு)
"சார்க்" மாநாட்டிக்கலந்து கொள்வதற்காக கொழும்பு வரும் இந்தியப்பிரதமர் பி.வி. நரசிம்மராவ் இலங்கையில் 24 மணித்தியாலங்கள் மட்டுமே தங்குவாரென்று தெரிவிக்கப்படுகிறது.

இம்மாதம் 7-ம் திகதி கொழும்பு வரவிருக்கும் இந்தியப் பிரதமர் அடுத்த நாள் 8-ம் திகதி இந்தியா திரும்பவுள்ளார்.

தமது சொந்த பாது

(4-ம் பக்கம் பார்க்க)

## ரயில் விபத்தில் 36 பேர் பலி

(பெங்களூர்)
பெங்களூரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ரயில் விபத்தில் 36 பேர் பலியானார்கள்.

இந்த விபத்தில் நூற்றுக்கும் அதிகமானோர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனு

(4ம் பக்கம் பார்க்க)

## தேசிய இரகசிய தகவல் பாதுகாப்பு அமைப்பு நிறுவ மொசாட் ஆணைக்குழு சிபார்சு

(கொழும்பு)
தேசிய இரகசிய தகவல் மற்றும் பாதுகாப்பு அமைப்பொன்றை நிறுவவேண்டும் என்று மொசாட் ஆணைக்குழு சிபார்சு செய்துள்ளது.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக போக்குவரத்து கட்டுப்பாட்டு முறையை சீர்ப்படுத்த வேண்டும். உபயோகித்த ஆயுதங்களை இலங்கைப் பாதுகாப்புப் படையினரின் பாவனைக்காக கொள்வனவு செய்வதை

(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழக கரையோரங்களில் 25,000 படகுகள் சோதனையிடப்பட்டன

(சென்னை)
தமிழகக் கடல்கரையோரங்களில் இதுவரை 25,000 படகுகளை இந்தியக் கடற்படையினர் சோதனையிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் சந்தேகத்தின் பேரில் 200 படகுகள் கடற்படையினரால் தடுத்துவைக்கப்பட்டுள்ளன.

இலங்கைத் தமிழர் உட்பட 185 பேர் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

[4-ம் பக்கம் பார்க்க]

## நான்கு மாகாணங்களில் ஆசிரியர் வெற்றிடம்

(கொழும்பு)
வடக்கு-கிழக்கு உட்பட நாட்டின் 4 மாகாணங்களில் பெருமளவு ஆசிரியர் பதவிக்குரிய வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன. குறிப்பாக கணித-விஞ்ஞான பாட ஆசிரியர்களே நியமிக்கப்படவுள்ளனர்.

மேற்படி பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பிப்போர் தமது சொந்த மாகாணத்தை விட ஏனைய மாகாணத்தில்

(4ம் பக்கம் பார்க்க)

## நாகபட்டினம் அருகே 4 மீனவரைக் காணவில்லை

(சென்னை)
நாகபட்டினமருகே மீன் பிடிக்கச் சென்ற 4 மீனவரை காணவில்லையென அறிவிக்கப் பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமையிலிருந்து காணாமற்போன இந்த மீனவர்களைத்தேடி கடற்படையின் 18 படகுகள்தேடும் பணியில் ஈடுபட்டுள்ளன.

## வரி விளம்பரம்

### புத்தகம்

நாமம் சொல்லுவோம் நமனை வெல்லுவோம் எங்கும் கிடைக்கும். (சி-5546)

### வைத்தியம்

செங்கமாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், பீனிசம், தலையிடி, தலை காலவியம், சூதகக்குத்து, கரும நோய்கள் மற்றும் சகலவியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர், இ. இராசரத்தினம், 121, 2ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (சி-5547)

### தேவை

காரியாலய அனுபவமுள்ள ஆண் லிகிதர் ஒருவர் தமிழ் தட்டெழுத்தறிவுடன் தேவை. தகுதியுள்ளோர் 05-11-1991க்கு முன்னர் 15, கொழும்புத்துறைச் சாலை, சுண்டுக்குளி என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும். செயலாளர், வடமாகாண அரசாங்க ஒப்பந்தகாரர் சங்கம். (சி-5549)

### இடமாற்றம்

தீவகத்தில் ஊர்காவற்றுறை, வேலணை, புங்குடுதீவில் சேவையாற்றிய பாக்கியம் குழந்தைகள் வைத்தியசாலை தற்காலிகமாக கல்வியங்காட்டில் இருந்து 1 மைல் தொலையில் உள்ள இருபாலைச் சந்தி, குரையூரம் இலத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. நிர்வாகம். (இ-5551)

## ஆலயத்தில் அகதிகள் தஞ்சம்

(புங்குடுதீவு)

தீவுப்பகுதியில் ஏற்பட்டுள்ள இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்துவந்துள்ள அல்லைப்பிட்டி பகுதியைச் சேர்ந்த அதினைந்து குடும்பங்கள் அரியாலை யூதாதேயு ஆலயத்தில் தஞ்சமடைந்துள்ளார்கள்.

மேற்படி ஆலயத்தில் தங்கியிருக்கும் மக்களுக்கு யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தினர் நிவாரணப் பொருள்களை வழங்கியுள்ளார்கள்.

## ஆசிரியர் சம்பளம்

(யாழ்ப்பாணம்)

கல்வித் திணைக்களத்தால் புதிதாகச் சேர்க்கப்படும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு 2050 ரூபாவும் ஏனைய ஆசிரியர்களுக்கு 1030 ரூபாவும் சம்பளமாக வழங்கப்படுமென தெரிய வருகிறது.

நாடு பூராவும் கணித, விஞ்ஞான ஆசிரியர்களுக்கு கல்வித் திணைக்களத்தால் விண்ணப்பங்கோரியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. [152]

## விரிவுரை வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்டமத்தியஸ்தர் சங்கத்தினரால் மழைய புதிய மத்தியஸ்தர்களுக்காக வாரந்தோறும் நடாத்தப்படும் விரிவுரை வகுப்புகள் மீண்டும் இவ்வாரம் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெறுமென்று மேற்படி சங்கத்தின் காரியதரிசி திரு. அ. தேவராசா தெரிவித்தார். (வி)

# உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி விபர அட்டவணை

(மெல்போர்ன்)

அவுஸ்திரேலியாவிலும், நியூஸிலாந்திலும் 1992-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22-ம் திகதி ஆரம்பமாகி மார்ச் 25-ம் திகதி முடிவடையும் உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியின் 39 ஆட்டங்களின் அட்டவணை வருமாறு:

பெப்ரவரி 22-ம் திகதி: இந்தியா எதிர் இங்கிலாந்து (அவுஸ்ரேலியா); நியூஸிலாந்து எதிர் அவுஸ்திரேலியா (நியூஸிலாந்து)

பெப்ரவரி 23ம் திகதி; மே. இந்தியா எதிர் பாகிஸ்தான் (அவுஸ்திரேலியா); இலங்கை எதிர் சிம்பாப்வே (நியூஸிலாந்து)

பெப்ரவரி 25-ம் திகதி: இலங்கை எதிர் நியூஸிலாந்து (நியூஸிலாந்து)

பெப்ரவரி 26ம் திகதி: அவுஸ்திரேலியா எதிர் தென் ஆபிரிக்கா அவுஸ்திரேலியா) பாகிஸ்தான் எதிர் சிம்பாப்வே (நியூஸிலாந்து)

பெப்ரவரி 27-ம் திகதி: இங்கிலாந்து எதிர் மே. இந்தியா (அவுஸ்திரேலியா)

பெப்ரவரி 28-ம் திகதி: இலங்கை எதிர் இந்தியா (அவுஸ்திரேலியா)

பெப்ரவரி 29-ம் திகதி மே. இந்தியா எதிர் சிம்பாப்வே (அவுஸ்திரேலியா) நியூஸிலாந்து எதிர் தென். ஆபிரிக்கா (நியூஸிலாந்து)

மார்ச் 1ம் திகதி. அவுஸ்திரேலியா எதிர் இந்தியா (அவுஸ்திரேலியா) இங்கிலாந்து எதிர் பாகிஸ்தான் (அவுஸ்திரேலியா)

மார்ச் 2-ம் திகதி; இலங்கை எதிர் தென் ஆபிரிக்கா (நியூஸிலாந்து)

மார்ச் 3-ம் திகதி: நியூஸிலாந்து எதிர் சிம்பாப்வே (நியூஸிலாந்து)

மார்ச் 4.ம் திகதி: இந்தியா எதிர் பாகிஸ்தான் (அவுஸ்திரேலியா)

மார்ச் 5-ம் திகதி: (அவுஸ்திரேலியா), எதிர் இங்கிலாந்து அவுஸ்திரேலியா மே. இந்தியா எதிர் தென். ஆபிரிக்கா (நியூஸிலாந்து)

மார்ச் 7ம் திகதி: இலங்கை எதிர் அவுஸ்திரேலியா (அவுஸ்திரேலியா), இந்தியா எதிர் சிம்பாப்வே (நியூஸிலாந்து)

மார்ச் 8-ம் திகதி: பாகிஸ்தான் எதிர் தென். ஆபிரிக்கா (அவுஸ்திரேலியா), நியூஸிலாந்து எதிர் மே. இந்தியா (நியூஸிலாந்து)

மார்ச் 9-ம் திகதி; இங்கிலாந்து எதிர் இலங்கை (அவுஸ்திரேலியா)

மார்ச் 10ம் திகதி: சிம்பாப்வே எதிர் தென். ஆபிரிக்கா (அவுஸ்திரேலியா): மே. இந்தியா எதிர் இந்தியா (நியூஸிலாந்து)

மார்ச் 11ம் திகதி: அவுஸ்திரேலியா எதிர் பாகிஸ்தான் (அவுஸ்திரேலியா)

மார்ச் 12-ம் திகதி இங்கிலாந்து எதிர் தென். ஆபிரிக்கா (அவுஸ்திரேலியா) நியூஸிலாந்து எதிர் இந்தியா (நியூஸிலாந்து)

மார்ச் 13-ம் திகதி; மே. இந்தியா எதிர் இலங்கை (அவுஸ்திரேலியா)

மார்ச் 14-ம் திகதி: அவுஸ்திரேலியா எதிர் சிம்பாப்வே. (நியூஸிலாந்து)

மார்ச் 15-ம் திகதி: இந்தியா எதிர் தென். ஆபிரிக்கா (அவுஸ்திரேலியா), பாகிஸ்தான் எதிர் இலங்கை (அவுஸ்திரேலிய) நியூஸிலாந்து எதிர் இங்கிலாந்து நியூஸிலாந்து)

மார்ச் 18-ம் திகதி அவுஸ்திரேலியா எதிர் மே. இந்தியா (அவுஸ்திரேலியா), இங்கிலாந்து எதிர் சிம்பாப்வே (அவுஸ்திரேலியா) நியூஸிலாந்து எதிர் பாகிஸ்தான் நியூஸிலாந்து)

மார்ச் 21ம், 22.ம் திகதிகளில் அரை இறுதியாட்டங்கள் நியூஸிலாந்தும் அவுஸ்திரேலியாவிலும் நடைபெறும்.

மார்ச் 25-ம் திகதி இறுதியாட்டம் அவுஸ்திரேலியாவில் நடைபெறும். (வி)

## அறிவித்தல்

### விவசாய பீட 1-ம் வருட மாணவர்கட்கு

முதலாம்வருட இரண்டாவது அரையாண்டு கணித, ஆங்கில செய்முறைப்பரீட்சைகள் 1991 நவம்பர் மாதம் 11ம்திகதி கிளிநொச்சி விவசாய பீடத்தில் ஆரம்பமாகும்.

ஏற்கனவே தீர்மானித்தபடி முதலாம் அரையாண்டு (மீள் பரீட்சை) 18-11-91 இல் கிளிநொச்சி விவசாயபீடத்தில் ஆரம்பமாகும்.

மேற்குறிப்பிட்ட திகதிகளில் மாணவர்கள் கிளிநொச்சி விவசாய பீடத்தில் பிரசன்னமாகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

[ஏ-1684]

## விவசாய கருத்தரங்கு

(பண்டத்தரிப்பு)

கெயர் நிறுவனம் பண்டத்தரிப்பு பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு காலபோக நெற்செய்கை பற்றிய கருத்தரங்கு ஒன்றை கடந்த வாரம் பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடாத்தியது.

பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்க தலைவர் திரு. எ. கந்தசாமி தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் கெயர் நிறுவனத்தின் யாழ். பிராந்திய பணிப்பாளர் திரு. பத்திநாதர் கலந்து கொண்டார். [72]

## தரம் குறைந்த அரிசி விநியோகம்

(யாழ்ப்பாணம்)

தமிழர் நலன் காக்கும் ஒன்றியம் தற்போது யாழ். மாவட்டத்தில் நிவாரணத்துக்கு விநியோகிக்கப்படும் அரிசி தரம் குறைந்து இருப்பதாக யாழ். அரசாங்க அதிபருக்கு முறையிட்டுள்ளது.

நிவாரணமாக வழங்கப்படும் அரிசி மாத்திரமன்றி ஏனைய பொருட்களும் மக்கள் பாவனைக்கு உகந்ததாக இல்லையென்றும் மக்கள் தமது இயலாத் தன்மையில் இப்பொருட்களை வாங்கிப் பாவிக்கிறார்கள் என்றும் ஒரு குடும்பஸ்தர் தெரிவித்தார். (152)

## தீவகமக்களின் உதவி அ. அ. மணிமனை

(புங்குடுதீவு)

தீவகத்தில் ஏற்பட்டுள்ள இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து அப்பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து வந்துள்ள புங்குடுதீவு, வேலணை மற்றும் பல பகுதிகளை சேர்ந்த மக்களுக்காக உதவி அரசாங்க அதிபர் மணிமனை ஒன்று தற்காலிகமாக இயங்கி வருகிறது. யாழ். அடைக்கலமாதா ஆலயத்திற்கு அண்மையில் இக்காரியாலயம் செயல்பட்டு வருகிறது.

இதில் தீவுப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தத்தமது அலுவல்களை பூர்த்தி செய்து வருகின்றார்கள். (101)

## கலை விழா

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மாணவிகளால் நடாத்தப்படவுள்ள கலை விழா இன்று 1-ஆம் திகதி வெள்ளிக்கிழமையும், 3-ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளது.

இக்கலை விழாவில் நடன ஆசிரியை திருமதி பத்மினி ஆனந்தன் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவார். (72)

## கூட்டுறவுச் சங்கம் சேதம்

(யாழ்ப்பாணம்)

பூநகரி கடற்படை முகாமிலிருந்து கடற்படையினர் மேற்கொண்ட பிரயத்தனத்தால் கிராமத்திலுள்ள மண்ணித்தலையிலுள்ள ஒரே ஒரு கூட்டுறவுச்சங்கம் கடுமையாக சேதமடைந்தது.

படையினர் இச்சங்கக்கடையின் பூட்டை உடைத்து முழுப் பொருட்களையும் எடுத்துச் சென்றதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர். (56)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட கல்வி அபிவிருத்திக் கழக அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை 2-ம் திகதி சனிக்கிழமை காலை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்திலும் வடமராட்சிக் கல்விக் கோட்ட கல்வி அபிவிருத்திக் கழக அங்குரார்ப்பணக் கூட்டம் நெல்லியடி ம. ம. வி. மண்டபத்திலும் பி.ப.2-00 மணிக்கு நடைபெறவுள்ளது.

## பிராந்திய அலுவலகம்

(பண்டத்தரிப்பு)

இணுவிலில் தனியார் வாடகை கட்டிடத்தில் இயங்கிவரும் மலேரியா தடுப்பு இயக்க யாழ். பிராந்திய அலுவலகம் இன்று முதலாம் திகதி தொடக்கம் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள முன்னைய யாழ். பிராந்திய சுகாதாரசேவைப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளது. (72)

## 7 மாதமாக சம்பளம் இல்லை

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்தில் இலங்கைப் போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த சகல ஊழியர்களுக்கும் கடந்த ஏப்பிரல் மாதம் தொடக்கம் 7 மாதங்களாக சம்பளம் வழங்கப்படவில்லை;

தங்கள் 7 மாதவேதனங்களையும் பெறக் கொழும்புத்தலைமை அலுவலகத்துடன் பல தடவைகள் தொடர்புகொண்டும் எதுவிதபலனும் இதுவரைகிடைக்கவில்லை என ஊழியர்கள் தெரிவித்துள்ளனர். (154)

## 10,900 பேர் தஞ்சம்

(யாழ்ப்பாணம்)

அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் தகவலின்படி யாழ். மாவட்டத்தில் அகதி முகாம்களில் வேலணையைச் சேர்ந்த 5400 மக்களும், புங்குடுதீவைச் சேர்ந்த 4000 மக்களும், யாழ்ப்பிரதேசகரையோரத்தைச்சேர்ந்த 1500 மக்களும் தங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


## வனிக்கா மெடிக்கல்ஸ்

274/2 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

எமது ஸ்தாபனத்திற்கு மருந்துப் பொருட்கள் வரவுள்ளது. விற்பனை 6-11-91ன் பின்பு ஆரம்பமாகவுள்ளது. தனியார் வைத்தியர்கள், வைத்தியசாலைகள், மருந்துச்சாலைகள் எம்மோடு குறிப்பிட்ட திகதியின் பின்பு தொடர்பு கொள்ளவும். நிர்வாகம்

(இ-5544)


## யாழ்ப்பாண மாநகரசபை அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் பாவனையிலுள்ள துவிச்சக்கர வண்டிகள் அனைத்திற்குமான 1991ஆம் ஆண்டுக்குரிய உரிமம் (லைசென்ஸ்) 15-11-91ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும்.

இத்திகதிக்குப் பின்னர் வீதிகளில் திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும்போது ஏற்படக்கூடிய அசௌகரியங்களைத் தவிர்த்து உரிய காலத்துக்குள் உரிமங்களைப் பெற்று எம்முடன் ஒத்துழைக்குமாறு சகல துவிச்சக்கரவண்டி உரிமையாளர்களும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
30-10-1991.

[ஏ-1687]

# வகுப்பேற்றப் பரீட்சை இம்மாதம் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

"யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் நவம்பர் 13, 14, 18, 19, 20ம் திகதிகளில் வகுப்பேற்றப் பரீட்சைகள் நடைபெறும்"

இவ்வாறு யாழ். கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் "இப் பரீட்சைக்கு பாடசாலை மட்டத்தில் வினாத்தாள்கள் தயாரிக்கப்படும். இவ் வினாத்தாள்கள் கோட்டக் மட்டத்திலும் யாழ். கல்வித்திணைக்களத்திலும் மூன்கூட்டியே அனுமதி பெறவேண்டும்.

டிசம்பர் 4ம் திகதி மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் மாணவர்களின் வகுப்பேற்றம் பற்றி மாணவர் தேர்ச்சி அறிக்கை கொடுக்க வேண்டும். டிசம்பர் 5ம் திகதி பாடசாலைகள் விடுமுறைக்காக மூடப்படும்.

பாடசாலைகளில் இடம் பெயர்ந்த மாணவர்கள் இருந்தால் அவர்களும் பரீட்சை எடுக்க அனுமதிக்கவேண்டும். ஏதும் நடைமுறைச்சிக்கல்கள் இருந்தால் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளரை அணுகி, பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளவேண்டும்.

புதிதாகத் தொடங்கும் க. பொ. த. உயர்தர மாணவர்களுக்கு ஒரு தவணைக்குரிய பரீட்சையும் நடாத்த வேண்டும்" என்றார். (152)

## இடமாற்றம்

(பண்டத்தரிப்பு)

இளவாலை பங்குத்தந்தை அருட்திரு பீற்றர் துரைரத்தினம் அடிகளார் மாதகல் பங்குத்தந்தையாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மாதகல் பங்குத்தந்தை அருட்திரு ரெஜி இராஜேஸ்வரன் அடிகளார் இளவாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். கிளிநொச்சி பங்குத்தந்தை அருட்திரு அமிர்தகுமார் அடிகளார், சில்லாலை பங்குத்தந்தையாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (72

# காரைநகரிலிருந்து ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

காரைநகரில் உள்ள படையினர் கடந்த நான்கு நாட்களாக காரைநகரிலிருந்து பொன்னாலை கரையோரப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்றுமுன்தினமிரவு ஆறு மணிக்கு மேல் ஷெல் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

வேலணைப் பகுதியிலிருந்து அராலி கரையோரப் பகுதியை நோக்கி நேற்றுமுன்தினம் நண்பகல் தொடர்ச்சியாக மூன்றுக்கு மேற்பட்ட ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர். (56)

## மருந்து தட்டுப்பாடு

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்திலுள்ள அரசாங்க வைத்தியசாலைகள் பலவற்றில் மலேரியா மருந்துத் தட்டுப்பாடு நிலவிவருகின்றது. (72)

## இராசி பலன்

1-11-1991

வெள்ளிக்கிழமை

(தமிழுக்கு ஐப்பசி 15)

தசமி மு. இ. 9-51 வரை, மகம் மு. இ. 7-26 வரை, இராகுகாலம் காலை 10-33 முதல் 7-33 வரை மரண யோகம்.

மேடம்: வேண்டாத உறவு, மனவேதனை, அவாலலோசனை,

இடபம்: தொழில் சிறப்பு, தெய்வதரிசனம், பணவரவு.

மிதுனம்: கண்ணில் ரோகம் குடும்ப கவலை, அலைச்சல்.

கடகம்: ஆடம்பர செலவு, குடும்பசுகம், தானதர்மம்.

சிங்கம்: பகைவர் துன்பம், உடல் உபாதை, கடன்படல்.

கன்னி: ஏமாற்றம் தொழில் பாதிப்பு, குடும்ப கஷ்டம்.

துலாம்: வெளியூர் செய்தி, விருந்தோம்பல், மகிழ்ச்சி.

விருச்சிகம்: குறைகேட்டல், மனவேதனை, காரியதடை.

தனுசு: அடிமைப்படல், நண்பர்பகை, வீட்டில் பிணி.

மகரம்: சுபகாரிய செலவு, இனசன வருகை, குடும்ப சிறப்பு

கும்பம்: வாக்கு வசீகரம், தொழில் லாபம், நண்பர் உதவி.

மீனம்: குடும்ப அலைச்சல், தொழில்போட்டி, அமைதிப்பு.

ஜோஸ்யர்

## இராணுவ நடவடிக்கை ஆரம்பம்

(வவுனியா)

வவுனியாவில் தமது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பகுதிகளை விஸ்தரிக்கவும், சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தவும் அப்பகுதியில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளவும் இராணுவத்தினர் முடிவுசெய்துள்ளனர்.

இந் நடவடிக்கையின் முதற்கட்டம் கடந்த திங்கள் முதல் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக இராணுவ பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## புதிய விலைப்பட்டியல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை உரக்கூட்டுத்தாபன உரவகைகளின் புதிய விலைப்பட்டியலை நல்லூர் கமநல சேவைகள் திணைக்களத்தில் பார்வையிடலாம்.

பெரும்போகத்துக்கான புதிய விலைப்பட்டியலில் ஒரு மெற்றிக் தொன்னுக்கு 200 ரூபா சலுகையாக கிடைக்கும் என மாவட்ட சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் திரு ஜீ. சிதம்பரநாதன் தெரிவித்துள்ளார்.

## உணவு முத்திரை

(சித்தன்கேணி)

காரைநகர் கோத்தணி பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை அதிபர்களினூடாக மே, ஜுன், ஜுலை, ஆகஸ்ட் ஆகிய நான்கு மாதங்களுக்குரிய மதியபோசன உணவு முத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன.

காரைநகர் ப. நோ. கூ. சங்கத்தினர் இந்த உணவு முத்திரைகளுக்குரிய உணவுப் பொருள்களை வழங்குவதற்குரிய நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். (137)

# பூநகரி கௌதாரிமுனை, கல்முனையில் சகலமக்களும் இடம்பெயர்வு; 1000 ஏக்கர் நெற்செய்கை பாதிப்பு!

(யாழ்ப்பாணம்)

பூநகரி வெட்டுக்காடு, கௌதாரிமுனை, விளாங்குளம், மண்ணித்தலை, கல்முனை ஆகிய இடங்களிலிருந்து சகலமக்களும் இடம்பெயர்ந்து விட்டனர்.

14 மைல் சுற்றளவுள்ள இப் பகுதியில் சுமார் 300 குடும்பங்கள் வசித்து வந்தன.

இவற்றில் 86 மீனவர்குடும்பங்களும், 88 விவசாயக் குடும்பங்களும், 50 சிவல்தொழிலாளர் குடும்பங்களும், மிகுதி கூலிவேலை செய்யும் குடும்பங்களுமே மேற்குறிப்பிட்ட பகுதிகளில் வசித்து வந்தவர்களாவர். இவர்கள் அனைவரும் தொழிலை இழந்துள்ளனர்.

300 குடும்பத்தினரும் ஆடு, மாடு, கோழி போன்றவற்றினை தங்கள் வீடுகளிலேயே விட்டு வந்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

மீனவர்களின் 24 வள்ளங்கள் காற்று, மழையினாலும் சேதப்பட்ட நிலையிலிருப்பதாகவும் அதில் சிலவற்றைப் படையினர் எடுத்துச் சென்றதாகவும், விவசாயிகள்காலபோகச் செய்கையினை மேற்கொண்டதால் பல லட்சரூபா நஷ்டமேற்பட்டதாகவும் சுமார் 1000ஏக்கர் நெல்வேளாண்மை பாதிக்கப்பட்டதாகவும் தெரிவித்தனர்

தற்போதைய நிலையில் கால்நடைகள் அவிழ்த்துவிடப்பட்ட நிலையிலுள்ளதாகவும் பயிர்களை கால்நடைகளும், படையினரும் சேதப்படுத்தி வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். [56]

## கடுகதி தபால் சேவை

(யாழ்ப்பாணம்)

1992 ஆம் ஆண்டு முதல் இலங்கை முழுவதிலும் தபால் திணைக்களம் கடுகதி தபால் சேவையினைத் அறிமுகப்படுத்த இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் பொதுமக்களுக்கு பல நன்மை கிடைக்குமென்றும் தபால் திணைக்களத்திற்கு அதிக லாபம் கிடைக்கும் என்றும் கூறப்படுகிறது [56]

## புனிதர்கள் திருநாள்

(ஊர்காவற்றுறை)

கத்தோலிக்க திருச்சபை இன்று 1ம் திகதி வெள்ளிக்கிழமை சகல புனிதர்களின் திருநாளைக் கொண்டாடுகின்றது. யாழ். ஆசனக்கோவிலில் பங்குத்தந்தை அருட்திரு சவரிமுத்து கிங்ஸ்லி ஜெபநேயன் அடிகள் தலைமையில் நடைபெறவிருக்கிறது. [59]

# ஆசிரியர்களுக்கு ஆறு மாத கடன் வழங்க ஏற்பாடு செய்யவேண்டும்

(புங்குடுதீவு)

வேலணை கோத்தணி தமிழ் ஆசிரியர் சங்கத்தின் கூட்டம் கோத்தணி அதிபர் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆறுமாதகடன் வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

நாட்டில் ஏற்படுகின்ற நெருக்கடி நிலைகளால் ஆசிரியர்கள் பிரச்சினைகளை எதிர்நோக்குவதால் நிவாரணம் வழங்கப்படவேண்டும்.

சவரிக்காரம் வழங்காததினால் ஆசிரியர்கள் பாடசாலைக்கு சுத்தமாகச் செல்ல முடியாதிருப்பதால் பாடசாலைகளில் சுகாதாரத்தைப் பேணமுடியாமல் இருக்கிறது. 101)

## கிணற்றில் வீழ்ந்தவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

வீட்டுக் கிணற்றில் நீர் அள்ளச் சென்ற ஒருவர் தவறுதலாக தடுக்கி வீழ்ந்து மரணமானார்.

மானிப்பாய் பிப்பிலியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை கணேசு [36 வயது] என்பவரே மரணமானவராவார். இவர் உடனடியாக யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்டு அங்குமரணமானார். [56]

## ஐவர் தெரிவு

(சித்தன்கேணி)

வட்டு வடக்கு கிராமசேவை அலுவலர் பிரிவு பாவனையாளர் பாதுகாப்புக்குழுவுக்கு ஐந்துபேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். [137]

# இ. போ. ச.வில் தமிழ் மொழிக்கும் இடமளிக்க வேண்டும்

(கொழும்பு)

இலங்கைப் போக்குவரத்துச் சபையில், சிங்கள மொழிக்கு வழங்கப்பட்டுவரும் முக்கியத்துவத்தைத் தமிழ்மொழிக்கும் வழங்கப்படவேண்டுமென்று பதில் போக்குவரத்து அமைச்சர் ஜனாப் பாருக் அறிவித்துள்ளார்.

அண்மையில் மக்கள் மயப்படுத்தப்பட்ட இ. போ. ச. பஸ்களிலும், டிப்போக்களில் உள்ள பெயர்ப்பலகைகளிலும் நிர்வாகத்திலும் சிங்கள மொழிக்குக் கொடுக்கப்பட்டுவரும் முக்கியத்துவத்தை தமிழ்மொழிக்கும் உடன்வழங்கப்படவேண்டுமென அமைச்சர் சகல டிப்போக்களுக்கும் அறிக்கையொன்றை அண்மையில் அனுப்பிவைத்துள்ளார்.

கடந்த வாரம் கொழும்பில் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா தலைமையில் நடைபெற்ற மினி அமைச்சரவைக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (வி)

## மண்வெட்டி விநியோகம்

(யாழ்ப்பாணம்)

உலக வெயர் ஸ்தாபனம் யு. எஸ். உதவி விவசாயத் திட்டத்தின் பயனாளி நிறுவனங்கள் மூலம் மண்வெட்டிகளை விநியோகித்து வருகிறது.

யாழ். மாவட்டத்திலுள்ள பண்டத்தரிப்பு, சங்கானை, மானிப்பாய், உடுப்பிட்டி, கட்டைவேலி, கொடிகாமம், சாவகச்சேரி, கைதடி ப. நோ. கூ. சங்கங்களின் மூலம் இந்த விநியோகத்தினை செய்துவருகின்றது. (153)

# அராலியைச் சேர்ந்த 146 குடும்பங்கள் நவாலியில் தஞ்சம்

(உடுவில்)

அராலி கிராமத்தைச்சேர்ந்த 146 குடும்பங்கள் இடம்பெயர்ந்து நவாலி மகாவித்தியாலயத்தில் தங்கியுள்ளனர்.

இராணுவ நடவடிக்கைகளால் இப்பகுதிகளில் இடம்பெயர்ந்துவந்தோர் அனேகர் பாடசாலைகள், கோவில்கள், உறவினர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர்.

நவாலி மகாவித்தியாலயம், நவாலி தெற்கு அமெரிக்க மிஷன் தமிழ் கலவன் பாடசாலை, நவாலி றோமன் கத்தோலிக்க பாடசாலை, ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியவித்தியாசாலை, நவாலி சென். பீற்றேஸ் பாடசாலை ஆகியவற்றில் சுமார் 250 குடும்பங்களுக்கு மேல் தங்கியுள்ளனர்

இடம்பெயர்ந்தோர் அதிகமாக தங்கியுள்ள நவாலி மகாவித்தியாலயம், ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியவித்தியாசாலை ஆகியவற்றில் வகுப்புக்கள் நடத்தமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் அகதிகள்புனர்வாழ்வுக்கழகம் அக்கறைசெலுத்திவருகின்றது. மூன்று நாட்களுக்கு ஒருமுறை குடும்ப அங்கத்தவர் ஒவ்வொருவருக்கும் ஒரு கிலோ அரிசி, குடும்பச்சீட்டு அட்டைக்கு ஒரு கிலோ மா, சீனி, பருப்பு ஆகியவற்றை வழங்கி வருகின்றனர்.

இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள இடங்களில் தொற்று நோய், வயிற்றோட்டம் போன்றவை பரவாமல் இருப்பதற்கு சுகாதாரசேவை அதிகாரிகளும் சுகாதார பரிசோதகர் பிரிவினரும் ஏற்ற முன்னேற்பாடுகளை செய்துள்ளனர். [109]

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தாய் மன்றத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் தலைவர் பாதுமுராான் தலைமையில் நல்லூர் வடக்கு தமிழ்த்தாய் நூலகத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4-00 மணியளவில் நடைபெறவுள்ளது எனவே அன்றைய தினம் தமிழ்த்தாய் மன்ற அனைத்து நிர்வாக உறுப்பினர்களும் தவறாது சமூகம் தருமாறு வேண்டப்படுகின்றனர். (வி)

## நுண்கலை பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை நுண்கலைப் பரீட்சைகள் ஏற்கனவே அறிவித்தபடி நவம்பர் 9,10ம் திகதிகளில் நடைபெற மாட்டாது என கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் இருந்து பரீட்சைக்குரிய தாள்கள் தருவிக்க முடியாத காரணத்தால் இப் பரீட்சை பின் போடப்பட்டுள்ளது என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [153]

# "இந்தியாவில் புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்டதாக பிரகடனப்படுத்தவேண்டும்"

(சென்னை)

விடுதலைப் புலிகள் இயக்கத்தை இந்தியாவில் தடை செய்யப்பட்ட இயக்கமாகப் பிரகடனப்படுத்தவேண்டும் என வாழப்பாடி ராமமூர்த்தி கூறியுள்ளார்.

இந்தியப் பிரதமர் திரு. நரசிம்மராவுடன் பேசியபோது தான் இதனை வலியுறுத்தியுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

தற்போது உள்ள சட்டங்களின்படி பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்ற சட்டத்தின்கீழ் மாத்திரமே புலிகள் இயக்கத்தினரை கைதுசெய்யமுடியும். இதனாலேயே மத்திய அரசை புலிகள் இயக்கத்தை தடை செய்யப்பட்ட சட்டத்தின்கீழ் கொண்டுவருமாறு திரு. வாழப்பாடி வலியுறுத்திவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## அத்தியாவசிய உணவுப்பொருள்கையிருப்பு ஒப்படைக்க உத்தரவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சகல வர்த்தகர்களும் தமது தேவைக்கு மேற்பட்ட அத்தியாவசிய உணவுப்பொருட்களை வைத்திருக்கும் ஏனையோரும் தமது கையிருப்பை நாளை சனிக்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு முன்னர் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இவ்வாறு செய்யத்தவறின் அப்பொருள்கள் பதுக்கல் பொருட்களாக கருதப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஒய்வூதிய வவுச்சர்கள்

(மானிப்பாய்)

மலேசியா, சிங்கப்பூர், பர்மா ஒய்வூதியம் பெறுபவர்களின் ஐப்பசி மாதத்திற்குரிய ஒய்வூதிய வவுச்சர்களும் அவற்றிற்கான காசோலைகளும் கொடுப்பனவுகளுக்காக அந்தந்த வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் இவற்றைப் பெற்றுக்கொண்டு அதுடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்தி உடனடியாக யாழ். செயலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு ஒய்வூதியப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (71)

# 3 இலங்கை தமிழர் தப்பியோட்டம்

(சென்னை)

தமிழ்நாடு மதுராந்தகம் சிறைச்சாலையில் இருந்து 3 இலங்கைத் தமிழர் அண்மையில் தப்பியோடியுள்ளதாக தமிழக காவல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

இவர்களுடன் சேர்த்து மொத்தம் 6 இலங்கைத் தமிழர் மதுராந்தகம் சிறைச்சாலையிலிருந்து தப்பியோடிவிட்டதாக பொலிசார் மேலும் தெரிவித்துள்ளனர். (க)

### தேசிய இரகசிய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிறுத்தவேண்டும் என்றும் இந்த ஆணைக்குழு சிபார்சு செய்துள்ளது.

விக்டர் ஒஸ்ரொவ்ஸ்கி என்பவரால் இலங்கையையும் இஸ்ரேலிய மொசாட் ஸ்தாபனத்தையும் சம்பந்தப்படுத்தி "பை வே ஒஃப் டிசெக்ஷன்" என்ற நூலில் எழுதப்பட்டிருந்த குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்கென ஜனாதிபதியினால் இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டிருந்தது.

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்திற்கும் மொசாட் உளவுப்படை ஒரே நேரத்தில் பயிற்சியளித்ததாகவும், உலகவங்கி வழங்கிய அபிவிருத்திநிதியைக்கொண்டு ஆயுதக்கொள்வனவு செய்ததாகவும் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டை இந்தக்குழு நிராகரித்துள்ளது.

### இந்திய-இலங்கை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; இம்மாதம் 7ம் திகதி கொழும்பு வரவிருக்கும் இந்தியப் பிரதமர் திரு பி. வி. நரசிம்மராவும் இலங்கை ஜனாதிபதி பிரேமதாசாவும் இருதரப்பு உறவுகள் குறித்து உரையாடவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளையில் சார்க் மாநாட்டில் கலந்து கொள்ளும் முகமாக அவ்வவ் நாடுகளின் வெளியுறவுச் செயலர்கள் இன்று கொழும்பு வருவர் எனவும் வெளியுறவு அமைச்சர்கள் அடுத்த இருநாட்களில்கொழும்புவந்துசேர்வர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

நவம்பர் 7-ஆம் திகதி முதல் 9-ஆம் திகதி வரை சார்க் மாநாடு கொழும்பில் நடைபெறவிருப்பது தெரிந்ததே. (க)

### சகலருக்கும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

னியால் வாடுவதை நாம் பார்த்துக்கொண்டிருக்க முடியாது."

இவ்வாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா [மாத்தயா] நேற்று பத்திரிகையாளர் மத்தியில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:-

அரசாங்கம் இன்று திட்டமிட்ட பொருளாதாரத் தடையை நடைமுறைப்படுத்திவருகின்றது. இந்நிலையை இங்குள்ள வர்த்தகர்கள் தமக்கு சாதகமாக பயன்படுத்தி உணவுப் பொருட்களை பதுக்கிவைத்து தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று பொதுமக்கள் மத்தியில் பொய்யான பிரச்சாரம்செய்து தமது பதுக்கல் பொருட்களை மிகக் கூடுதலான விலைக்கு விற்று வருகின்றார்கள்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலும், அரசாங்க உணவுக் களஞ்சியங்களிலும் தற்போது இருக்கும் போதியளவிலான உணவுப்பொருட்களை சகல மக்களுக்கும் கிடைக்க வேண்டுமென்பதற்காகவே "பாவனையாளர் பாதுகாப்புக் குழுக்களை" யாழ். செயலகம் தற்போது உருவாக்கியுள்ளது.

இக்குழு தத்தமது பகுதிகளில் உள்ள அனைத்து மக்களுக்கும் உணவுப் பொருட்கள் கிடைக்கின்றதா என்பதையும் வர்த்தகர்களின் பதுக்கலையும் கண்காணித்துக் கொள்ளும்.

பொருளாதாரத் தடையால், 80 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் வறுமைக்கோட்டுக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள். எரிபொருள் தடையால் விவசாயிகள், மில் தொழிலாளர், மற்றும் கூலித்தொழிலாளர்களும் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளார்கள். இவர்களுக்கு உதவி செய்ய தமிழர் தொண்டர் ஸ்தாபனங்கள் முன்வரவேண்டும்.

தற்போது தொழில் எதுவும் இன்றிக் கஷ்டப்படும் வகுப்புத் தொழிலாளர்களுக்குத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இலவசமாக உணவுப்பொருட்களை விநியோகித்து வருகின்றது.

அத்தியாவசியப் பொருட்களைப் பொதுமக்கள் தமது இல்லங்களில் நடைபெறும் வைபவங்களுக்குக் கூடுதலாகப் பெற்றுக்கொள்ளவேண்டுமானாலும், தமது குழந்தைகளுக்குப் பால்மாவகைகளைப் பெறவேண்டுமானாலும், தமது பகுதி கிராமசேவை அலுவலகரிடமோ அல்லது பாவனையாளர் பாதுகாப்புக் குழுக்களுடனோ தொடர்புகொண்டு கணிசமான பொருள்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி அத்தியாவசியப் பொருள்களுக்கான கட்டுப்பாட்டு நடவடிக்கை தற்காலிகமானதேயாகும். போதியளவு உணவுப்பொருள்கள் இங்கு கிடைக்கும் பட்சத்தில் இக் கட்டுப்பாட்டுத் திட்டம் உடன் நீக்கப்பட்டுவிடும்" என்றும் அவர் கூறினார். (வி)

### தமிழ் அரசியல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவர்கள் பேச்சுக்கள் நடாத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தமிழ்கட்சிகள் சில விரைவில் ஜனாதிபதியை சந்திக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

### தமிழக கரையோரங்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்தும் இந்திய கடற்படையினரின் இந்த நடவடிக்கைகள் இடம்பெற்று வருகிறது. (சி)

### நான்கு மாகாண

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளும் விண்ணப்பிக்கலாமெனவும் தகுதியானோருக்கு நியமனம் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு-கிழக்கு, ஊவா, வடமத்திய மாகாணங்களிலேயே போட்டிப் பரீட்சை மூலம் இந்த ஆசிரியர் தெரிவு இடம்பெறும். (சி)

# குவைத் நிவாரண விண்ணப்பப் படிவங்கள்

(மானிப்பாய்)

யாழ். செயலகத்தில் கையேற்கப்பட்ட 1284 குவைத் நிவாரண விண்ணப்பப்படிவங்கள் யாழ் அரச அதிபர் மூலம் வெளிநாட்டுவேலைவாய்ப்பு பணியகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கான நிவாரண உதவிகள் அடுத்தவருட முற்பகுதியில் வழங்கப்படுமென அரசு அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (71)

# 18 லட்சாதிபதிகள் மட்டுநகரில்கடத்தல்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் 18 இலட்சாதிபதிகள் ஆயுதபாணிகளால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கோவில் திருவிழா ஒன்றில் கலந்துகொள்ளச் சென்றவர்களே இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தொழில் அதிபர்கள், செல்வந்தர்கள் ஆகியோரே இவ்வாறு கடத்திச்செல்லப்பட்டனர்.

## உணவு வாகனங்களுக்கு இராணுவ பாதுகாப்பு

(கொழும்பு)

"யாழ்ப்பாணத்துக்கு உணவுப்பொருள் எடுத்துச் செல்லும் வாகனங்களுக்கு ராணுவ பாதுகாப்பு வழங்கப்படும்"

இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை தலைமைச் செயலகத்தைச் சேர்ந்த பிரிகேடியர் அசோகா ஜயவர்த்தன நேற்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது: அத்தியாவசிய திணைக்கள ஆணையாளரின் வடபகுதிக்கு அனுப்பப்படும் உணவுப்பொருட்கள் மருந்துவகைகள் ஆகியவற்றை அதிகரிக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

பொருட்களை இறக்குவதற்காக மேலும் காங்கேசன்துறையிலும், பருத்தித்துறையிலும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

## 88 குடும்பங்களுக்கு 19ம் கட்ட நிவாரணம்

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் தங்கியுள்ள 88 அகதிக் குடும்பங்களுக்கு 19-வது கட்ட நிவாரணம் வழங்கப்பட்டது.

மேற்படி பாடசாலையில் கொக்குவில், நாவாந்துறை ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்கள் தங்கியுள்ளனர். இவர்களுக்கு எதுவித நிவாரண உதவிகளும் வழங்கப்படவில்லையென ஈழநாடு செய்தியொன்று வெளியிட்டது குறிப்பிடத்தக்கது.

## உத்தரவுபெற்ற வியாபாரிகள் அத்தியாவசிய பொருள்கள் விற்பதற்கு அனுமதி

(கொழும்பு)

உத்தரவு பெற்ற வியாபாரிகளுக்கு அத்தியாவசிய பொருள்களை விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

உத்தரவுபெற்ற வியாபாரிகளிடமும் பொதுமக்கள் இனிமேல் தமக்குரிய அத்தியாவசிய பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தமது வசதிக்கேற்ப பணத்தைக் கொடுத்து சட்டம் கட்டமாக பொதுமக்கள் இப்பொருட்களைப் பெற்றுக் கொள்ளலாம். (வி)

### ரயில் விபத்து

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மதிக்கப்பட்டுள்ளதாகவும் மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### நரசிம்மராவ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காப்பையொட்டியே அவர் அடுத்த நாள் திரும்பவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (153)

### ஹோட்டல்களுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஹோட்டல்களில் தங்க உள்ளதாலேயே இவ்வாறு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கென விசேட பயிற்சி பெற்ற பொலிஸ் படை ஒன்று இப்பகுதிகளில் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளது. (ஐ)

### நாட்டில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

### கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மத்திய மின்நிலைய ஊழியர்கள் உட்பட இலங்கை மின்சார சபையின் வடபிராந்திய சகல ஊழியர்களும் இம்மாதம் 4-ம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சுன்னாகம் யாழ் பிரதேச பொறியியலாளர் காரியாலயத்தில் ஓர் கலந்துரையாடலுக்கு தவறாது சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

### புலிகளின்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

வந்த படையினரை மேலு முன்னேறவிடாது புலிகள் தாக்குதல் நடத்தினர்கள்.

புலிகளின் தாக்குதலையடுத்து இராணுவத்தினர் பின்வாங்கி முகாம் திரும்பினார்கள்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 62-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registred as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number B/10336/31.